# நவம்பர் 17 சனாதிபதித் தேர்தலுக்காக ஐரோப்பிய ஒன்றியத் தேர்தல் அவதானிப்புக் குழுவை இலங்கைக்கு அனுப்புதல் (EOM) - 2005

28, ஒக்தோபர் 2005 கொழும்பு.

**இலங்கையில் நவம்பர் 17 இல் நடைபெறவுள்ள சனாதிபதித் தேர்தலை அவதானிப்ப தற்காக இலங்கை குடியரசுத் தேர்தல் ஆணையாளரின் அழைப்பின் பேரில் ஐரோப்பிய ஒன்றியமானது தேர்தல் அவதானிப்புக் குழுவொன்றை (EU EOM) ஏற்படுத்தியுள்ளது. EU EOM ஆனது 2000, 2001 மற்றும் 2004 ஆம் ஆண்டுகளில் நடைபெற்ற பாராளுமன்ற தேர்தல்களிலும் தலைமை அவதானிப்பாளராகக் கடமையாற்றிய திரு. ஜோன் குஷன்ஹன் (அயர்லாந்து) அவர்களின் தலைமையில் முன் நடத்திச் செல்லப்படும்.**

தலைமை அவதானிப்பாளருக்கு மேலதிகமாகப் பிரதித் தலைமை அவதானிப்பாளர் செல்வி டல்ஃபின் பிளாஞ்ச் (பிரான்ஸ்) சட்டம்/ தேர்தல் வல்லுநர் செல்வி இடொய்யா அறன் சிற்றா (ஸ்பெயின்), ஊடக நிபுணர் திரு. அன்ட்றேயா மல்நட்டி (இத்தாலி), அவதானிப்பு இணைப்பாளர் செல்வி ஹன்னா றொபர்ட்ஸ் (ஐக்கிய இராச்சியம்), நடவடிக்கைகள் வல்லுநர் திரு. மிகுவெல் அறான்ஸ் (பெல்ஜியம்) மற்றும் பாதுகாப்பு ஏற்பாட்டு நிபுணர் திரு. ஜூவான் கார்ஷியா (ஸ்பெயின்) ஆகியோரை உள்ளடக்கியமையக் குழுவொன்றைக் கொண்டுள்ளது.

இலங்கைக்கான EU EOM ஆனது ஒக்ரோபர் 23 ஆம் திகதி ஏற்படுத்தப்பட்டதாகும். அத்துடன் தேர்தல் செயன்முறை பூர்த்தியாகும்வரை அது நாட்டில் தங்கியிருக்கும். இக்குழு 22 நீண்டகால அவதானிப்பாளர்களைக் (LTOக்கள்) கொண்டிருக்கும். ஒக்ரோபர் 29 ஆந் திகதி இவர்கள் நாட்டை வந்தடையும் இவர்கள், நாடு முழுவதிலும் அவதானிப்புக் கடமைகளில் ஈடுபடுத்தப்படுவார்கள். இதற்கு மேலதிகமாக, வாக்கெடுப்பு மற்றும் வாக்குகளை எண்ணும் நடைமுறை என்பனவற்றை அவதானிப்பதில் 44 குறுங்கால அவதானிப்பாளர்களும் (STO க்கள்) EU EOM உடன் இணைந்து கொள்வார்கள்.

தேர்தல்களை அவதானிப்பதென்பது சனநாயகமயப்படுத்தலையும் மனித உரிமைகளையும் உலகெங்கிலும் முன்னேற்றுவதற்கான அதன் கொள்கையின் முக்கியமான ஓர் ஆக்கக்கூறு என ஐரோப்பிய ஒன்றியம் கருதுகிறது. EU ஆனது இவ்வாறான செயற்பாடுகளை உபசரிப்பு நாட்டுடனான பங்காண்மை அடிப்படையிலும் தேசியத் திறனை விருத்தி செய்யும் நோக்குடனுமே மேற்கொள்கின்றது.

தேர்தற் செயன்முறையின் முழு அளவிலான பகுப்பாய்வை நடாத்துதல், தேர்தல் பற்றிய பக்கச் சார்பற்ற சமநிலையான ஒரு மதிப்பீட்டை வழங்குதல் மற்றும் தேர்தலில் சுதந்திரமாகப் பங்குபற்றுவதற்கான வாக்காளரின் நம்பிக்கையை உறுதி செய்தல் என்பனவே தேர்தல் அவதானிப்புக் குழுவின் பிரதான நோக்கங்களாகும்.

EU EOM ஆனது சட்டவாக்கற் சட்டகம், தேர்தல் நிருவாகம், அரசியல் சூழ்நிலை மற்றும் பிரசார வேளைகளில் அரச வளங்கள் எவ்வாறு பயன்படுத்தப்பட்டன, பிரசாரத்தின் போது ஊடகங்கள் நடந்து கொண்ட விதம், வாக்கெடுப்பு, வாக்குக் கணக்கெடுப்பு, அட்டவணைப் படுத்தும் நடைமுறைகள் மற்றும் ஏதாவது முறையீடுகள் மற்றும் மேன்முறை யீடுகள் உள்ளிட்ட தேர்தல் பிரசாரம் என்பனவற்றைப் பரிசோதனை செய்கிறது. இவ்வணுகுமுறையானது தேர்தல் அவதானிப்புக்கெனச் சர்வதேச ரீதியில் ஏற்றுக் கொள்ளப்பட்ட நியமங்களை அடிப்படையாகக் கொண்டதாகும்.

தேர்தல் நிருவாக அதிகாரிகள், ஏனைய உரிய அதிகாரசபைகள், அரசியல் கட்சிகள் வேட்பாளர்கள், சிவில் சமூகம், ஏனைய அவதானிப்புக்குழுக்கள் மற்றும் ஊடகங்கள் என்போருடனான சந்திப்புக்கள் கிரமமாக நடாத்தப்படுகின்றன. தேர்தல் நாளன்று நாடு முழுவதிலும் நடைபெறும் வாக்கெடுப்பு, வாக்குக் கணக்கெடுப்பு மற்றும் அட்டவணைப் படுத்தும் நடைமுறைகள் என்பனவற்றின் மீது அவதானிப்பாளர்கள் அவதானம் செலுத்துவார்கள்.

தேர்தலின் பின்னர் EU EOM ஆனது முழுச் செயன்முறையின் மீதான அவதானிப்பை அடிப்படையாகக் கொண்ட தனது முதனிலைக் காண்புகள் மற்றும் முடிபுகள் குறித்த ஓர் அறிக்கையை வெளியிடும். மேலும் முழு நிறைவான இறுதி அறிக்கையானது தேர்தல் நடந்து ஏறத்தாழ இரண்டு மாதங்களின் பின்னர் வெளியிடப்படும். இறுதி அறிக்கையானது இலங்கையில் எதிர்காலத் தேர்தல்களை நடாத்தும் விதத்தை முன்னேற்றுவதற்கான பரிந்துரைகளை உள்ளடக்கியிருக்கும்.